செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. உ [வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ 28௨. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ௵ ஐப்பசி மீ ௯௨ வெள்ளிக்கிழமை (25-10-1968) [இல-௨

# சைவபரிபாலனசபையின் புதிய தலைவர் தேர்தல்

## 'சித்தாந்தவித்தகர்' உயர்திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையை ஏற்றனர்

சென்ற 20-10-68 -இல் நடைபெற்ற யாழ். சைவ பரிபாலனசபையின் நிருவாக சபைக் கூட்டத்தில் வழக்கறிஞராகிய சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் சபையினது புதிய தலைவராகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர். இவர் ஆங்கில அறிவும் தமிழறிவும் நிரம்பியவர். சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம் கந்தரலங்காரம் திருப்புகழ் முதலிய நூல்களுக்குச் சிறந்த உரை எழுதிய சிவானுபூதிச் செல்வர் திரு திருவிளங்கம் அவர்களின் சீடராவர் அவருடைய உரை வெளியீட்டுக்கும் உதவியா யிருந்தவர். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசம் நடாத்திய சைவ மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பணி புரிந்தவர். அவருடைய தெரிவையிட்டு யாவரும் இன்புறுகின்றனர். இறைவனருளால் சைவ பரிபாலனசபை நமது நாட்டுக்கு அன்னாரின் தலைமையில் அரிய சைவப்பணி ஆற்றுமென எதிர்பார்க்கின்றோம். ——

## திருப்பதி தேவஸ்தான அறிவிப்பு

# திகில் அடையாதீர்!

### திருப்பதிப் பாம்புபற்றிய செய்தி

[கோக்குவில் டாக்டர் எஸ். இராசரத்தினம் அவர்களுக்குத் திருமலை, திருப்பதி தேவஸ்தான காரியஸ்தர் திரு உமாபதி அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் ]

திருமலை திருப்பதி தேவஸ்தானம்.

திருப்பதி வேங்கடேஸ்வர சுவாமி ஆலய கெற்பக்கிருகத்திற்குள் ஒரு பாம்பு நுழைந்தது எனவும் பின் அந்தப் பாம்பு ஒரு வயோதிபராகக் காட்சி கொடுத்து அங்குள்ள மக்களுக்கு உபதேசஞ் செய்து மறைந்துவிட்டது எனவும், தமிழ், தெலுங்கு, கன்னடம முதலிய மொழிகளில் அச்சிட்ட பொய்யான செய்திகளைப் பொதுமக்களுச் சிலர் பரப்புகின்றார்கள், வேங்கடேஸ்வரப் பெருமானின் அடியார்கள் அவ்விதமான பொய்ப் பிரசாரங்களினால் ஏமாற்றமடையக்கூடாதென்றும் அந்தத் துண்டுப் பிரசுரச் செய்தி முழுதும் தவறானதென்றும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

30-4-1968. K. உமாபதி, காரியஸ்தர்

உ

சித்தாந்தபண்டித பாலபண்டித
பிரவேசபண்டித பரீட்சை ள — 1969

ஷை பரீட்சைக்குரிய பாடத் திட்டத்தைப் பெற விரும்புவோர்:
பரீட்சைக் காரியதரிசி,
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு முத்திரை யொட்டிய தபாலுறை அனுப்புவார்களாக.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அண்டமா யாதியாயருமறை
யோடைம் பூதப்
பிண்டமா யுலகுக்கோர்பெய்
பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர் தாமலர்தூவிச்
சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானையென்
மனத்தே வைத்தேனே

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதோன்றன் உடம்பை உண்பையாயின், எவ்வகையால அருளை ஆளுவை?

——

நேயர்கள் நெஞ்சம

## 9-ஆம் வகுப்புத் தமிழ் மலர்

### தேவாரங்கள் செயற்கைப் பண்ணோ?

11-10-68 இந்துசாதனப் பத்திரிகையில் தமிழ்மலர் 9 ஐப் பற்றி ஒருவர் எழுதிய கடிதத்தைப் படித்தேன. சைவத்தை இழிவு செயும் வாக்கியங்கள் ஒன்றல்ல பலஉள. உதாரணமாக "தேவாரங்கள் செயறகைப்பண உடையவை" என்றும், "இவை உணர்ச்சியையே தலைமைநோக்கமாகக் கொண்டு பாடப்பட்டவை" என்றும் கூறப்பட்டிருக்கின்றன. தேவாரங்களை இதுவரை நாத்திகர்கள் கூட இவ்வாறு கூறியதில்லை சிவனடியார் நிந்தனை சிவநிந்தனையாகும் என நாவலர் ஐயா அவர்கள் கூறியிருக்கின்றார்கள். சமயகுரவர்கள கடவுளுக்கு ஒப்பப் போற்றப் படுவார்கள். அவர்களுடைய பாடல்கள் இயற்கைப் பண் உடையவை அருள் நிறைந்தவை இப்புத்தகத்தை எழுதியவர்கள் சைவத்திலே ஏன கைவைக்க வேண்டும அரசாங்க புத்தகங்களை வெளியிட உரிமை பெற்றதன பயன் இதுதானே? தேவாரங்கள் செயறகைப பண்ணுடைய. சிலப்பதிகார வரிப்பாடலகள் இயறகைப் பண உள்ளன வாம எப்படி இவர்கள் சமயப் பற்றும, அறிவும்! இச்சொற்கள் உண்மைச் சைவனுள்ளத்தைப் புண்படுத்துவன வன்றோ? இப்படியிருக்க ஒரு சொல்தானும் சைவத்தை இழிவுபடு[த்த]வில்லை எனக் கடிதத்[தை] எழுதிய சைவர் கூறுகி[ன்]றார் அவர் சைவர் அல்ல[ர்] அசைவர், உண்மையைக் [கூ]றுபவராயின் ஏன் தமிழாசி[ரி]யன் என்னும் பெயரில் மறை[ந்]து நிற்கவேண்டும்?

மாணவர் உள்ளம் தூ[ய] வெள்ளை போன்றது, அவர்[க]ளுள்ளத்திலே அழுக்குப் பே[ா]ன்றவை எளிதிற்படியக்கூ[டி]யவை இவற்றை அவர்க[ளு]க்குரிய பாடபுத்தகங்கள[ில்] அறிவுள்ளோர் எழுதார்,

9-ஆம தமிழ்மலர் ஈழத்த[ு] சைவத்திற்கும, தமிழுக்[கு]ம் தீங்கு செயும ஒரு முள்ய[ாகும்] இதன் முட்களை இப்போ[தே] அகற்றுதல் சைவப் பெரியா[ர்] கடமையாம்.

பண்டிதை .த. சிவசம்[பு]

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

## நாவலர் கலந்துகொள்ள[ாத] முடியாத விநாயகர்கோயிற்கூட்ட[ம்]

[திரு. ச. தனஞ்சயராசசிங்கம் அவர்கள் ]

ஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவாகமங்களை எழுத்தெண்ணிப்படித்திருந்தார். ஆலயப் பிரதிட்டை, விக்கிரக தாபித்தல் பூசை, திருவிழா முதலியவற்றினை ஆகம[வ]திகளுக்குப் புறம்பாக நடத்தியோரை வன்மையாகக் கண்டித்தார். நல்லூர்க் கந்தசுவாமிகோவில், வண்ணை[ப்] பண்ணைக் கதிரேசன் கோயில் முதலிய தலைப்புக்களி[ல்] அவர் எழுதிய கண்டனங்கள் இவ்வுண்மையினை நி[லை]நாட்டும். குமாரதந்திரம் முதலியநூல்களிலிருந்து பி[ர]மாணங்காட்டுவதற்கு அவருக்கு நிகர் அவரே. இதனு[ல்] கோயில் கட்டுவிப்போர், விக்கிரகம் தாபிப்போர், கோயில் முதலாளிகள், பூசகர், பூசை, திருவிழா ஆ[கி]யன நடத்துவோர், சிற்பாசாரியார் முதலிய பலதிறத்தினரும் நாவலரின் சைவநூற்பிரமாணங்காட்டும் பு[ல]மைக்கும் நாவன்மைக்கும் எழுத்துவன்மைக்கும் அ[ஞ்]சினர். பலர் அவர்சினத்திற்கு ஆளாகமல் தத்தஞ் ச[ம]யப்பணிகளை நிறைவேற்ற முயன்றனர்.

1879 ஆம ஆண்டு ஈழநாட்டுச் சமயவரலாற்றிலே சிறப்பிடம் பெற்றுளளது. நாவலர் அவர்களின் கலவி[ப்] புலமையையும சமயச் சீர்திருத்தநோக்கினையும், எவர்க்கும அஞ்சாத நேர்மையையும சமுதாயத் தொண்டினையும பலவேறு சமய இன எதிரிகளும் அக்காலத்தி[ல்] ஒப்புக்கொள்ளத் தொடங்கினர். இதுகாறும், கல்வி, சமயம ஆகிய இரு துறைகளில உழைத்துவந்த நாவலர் அவர்கள இவ்வாண்டிலும் இதற்கு முன்னைய ஈராண்டிலுஞ் சமூகமுன்னேற்றத்திற்கு உழைப்பதிலும தம் கவனத்தைத் திருப்பினார்கள. இம் மூன்றுதுறைகளில் நாவலர் அவர்கள கண்ட முடிபினையே பொதுமக்கள் தம் இறுதி முடிபென ஏற்கும் செல்வாக்கினை அவர்கள் தம் இறுதிக்காலத்திற் பெற்றிருந்தார்கள். "யாழ்ப்பாணத்திலே உவாந்திக்கப்பட்ட அசுசிப் பிராணியாகிய நான்" என்று அவர்கள் எழுதியகாலமொன்று இருந்தது. அப்பொழுது நாவலர் அவர்களுக்குத் த[...]

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கீலக ஞு ஐப்பசி மீ ௯-உ வெள்ளிக்கிழமை [1968]


## தேசிய ஒற்றுமை

இலங்கையில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் சிங்களம் தமிழ் முதலிய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். பௌத்த சமயம் இந்து சமயம் இஸ்லாம்சமயம் கிறிஸ்துசமயம் முதலியவற்றை அநுட்டிக்கின்றார்கள். சிங்களமக்களே இந்நாட்டில் பெரும்பான்மையான மக்களாகவுள்ளனர். அவர்களுள்ளும் பெரும் பான்மையோர் பௌத்த மதத்தையநுட்டிக்கின்றவர்கள். ஜனநாயக ஆட்சிமுறையில் பாராளுமன்றத்தில் அவர்களுக்குக்கூடிய பிரதிநிதித்துவம்வழங்கப்பட்டிருக்கின்றமையினல் அவர்களுக்கே அரசாங்கத்தில் செல்வாக்குண்டு. சுதந்திரத்தால் கிடைக்கக் கூடிய பலனை பெரும்பான்மையினரும் சிறுபானமையினருஞ் சரிவர அநுபவித்தல் வேண்டும். துரதிஷ்டமாக நமது நாட்டில பெரும்பான்மை மக்களாகவுள்ள சிங்களச் சகோதரர்கள சிறுபான்மை மக்களாகிய தமிழர்களுடைய பாஷை மதம் கலாசாரம் முதலியவற்றுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைப் பாதிக்கும்வண்ணம் சட்டங்களை இயற்றி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள. சிங்களமக்களுக்குச சிங்களப் பாஷையும் பௌத்தமதமும் எவ்வளவு அருமையாக அமைந்திருக்கின்றனவோ அவ்வளவுக்குத் தமிழ் மககளுக்குத் தமிழ்மொழியும் இந்துமதமும் அருமையானவை, இந்த உண்மையை நமது சிங்களத்தலைவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். அதன்காரணமாக சிறுபான்மையினராகவுள்ள தமிழ் மக்கள் அதிருப்தியும் கவலையும் பீதியுமடைந்துள்ளனர்.

17-10-68 ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறற காந்திசேவா சங்கத்தினர் நடத்திய நூற்றாண்டு விழாவில உரையாற்றிய செனேற்சபைத் தலைவரும இலங்கை காந்தி நூற்றாண்டுவிழா தேசிய நிருவாக சபைத் தலைவருமாகிய திரு. ஏ. இரத்தினயக்கா அவர்கள் ஆற்றிய விரிவுரை தமிழ் மககளுககு ஓரளவுக்கு மனச்சாநதியை யளித்துள்ளது. அவருடைய கருத்துககளை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வருமானல் நாட்டில் எல்லா மக்களும் ஒற்றுமையாக இன - மத பேதஙகளை மறந்து இன்பமாகவும் வாழ்வார்கள்.

அவருடைய கருத்துக்களில் சிலவற்றைக் கீழே தருகின்றோம். பௌத்த மதத்துக்குரிய சாததிரங்களின் கருத்துக்களைக கடைநது காணககூடிய சாரமாவது:- "நன்மைசெய், பாவஞ் செய்யாதே, இருதயத்தைத தூய்மையாக வைததுத்கொள்" இக் கருததுக்களையே மற்றைய மதஙகளும போதிககின்றன ஆகையினல் யாவரும் இவ்வுண்மைகளை அநுட்டித்து வாழ்தல் வேண்டும். நமது நாட்டில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு நாங்கள் காநதி மகானுடைய சத்திய நெறியையும, அன்பு நெறியையும் கடைப்பிடித்தல் வேண்டும் காந்தி மகானுடைய நூற்றாண்டுவிழா ஒரு வருட காலத்துக்கு நமது நாட்டில் நடைபெறும். இவ் வருடத்திலேயே நமது நாட்டில பாஷை, சமயம், கலாசாரம சம்பநதமாக எழுந்துள்ள வேற்றுமைகளுக்கு ஒரு சமாதானமான முடிவைக் காணுதல் வேண்டும். நாட்டிலுள்ள சகல இனத்தவர்களதும, மதத்தவர்களதும் தலைவர்கள் ஒரு மகாநாடு கூட்டி இவ் வேற்றுமைகளுககுச் சுமுகமான ஒழுஙகைக காணுதல் வேண்டும்.

எங்கள் நாட்டிலுள்ள சிங்களத் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும பிறரும் இப் பெரியாருடைய கருத்துக்களைச் சிந்தித்துக் கடைமை யாற்றுவார்களாக. இது இவ்வாறிருக்க பௌத்த பிக்குமார் இலங்கைக்கு விஜயஞ்செய்த பௌத்த மதத்தையும் சிங்கள மொழியையும் பரப்பும முயற்சி திரு. ஏ. இரத்தினயக்கா அவர்களுடைய புத்திமதிக்குச் சாதகமாயிருக்குமா?

## நாவலர் கலந்து கோள்ள முடியாத

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்ம பூமியைவிடச் சென்னை சற்று சௌக்கியமாயிருந்தது. பிறந்த இடத்தைவிடப்புகுந்த இடம்நாவலருக்கு அளித்தமதிப்பு அவர்கள் பிறந்த இடத்து மக்களின் உள்ளத்தினை மாற்றக் காலம் நீண்டு செல்லவில்லை. 1870- ஆம் ஆண்டில் யாழ்ப்பாணமக்கள் நாவலர் அவர்களை வரவேற்ற முறை இதை உணர்த்தும். விட்ட குறை தொட்டகுறையென நாவலர் அவர்களும் தம ஆக்கப் பணிகளை நிறைவேற்றத் தொடங்கினர்கள். 'Fools who came to scoff remained to pray" என்ற Oliver Goldsmith என்பவரின் கூற்றுச் சைவப்பிரகாசராகிய நாவலர் அவர்களின் சமயக்கூட்டங்களுககே முற்றும் பொருந்தும் இக்காலத்தில் நல்லூர் நாவலர் "வண்ணை நடு" நாவலராக மாறினர். அம்மாற்றம்பற்றிய வரலாறு தனி வரலாறாகும. அம் மாற்றத்திற்குரிய காரணங்களைக் காலப்போககில் யான் விளக்குவேன்.

இத்தகைய ஏறுபோற் பீடுபோடும் நாவலர் ஆண்டிலே (1879) அரியாலையைச் சார்ந்த விசுவநாதர் சின்னத்தம்பி என்பவர் தாம் அரியாலையில் எழுப்புவித்த விநாயகர்கோயிலில் பிரதிட்டைபண்ணப்பட்ட விக்கிரக விவகாரம்பற்றி நாவலர் அவர்களின் உதவியை நாடினர் அராலி விநாயகர் கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்ட சபாநாயகர் விக்கிரகமும் சிவகாமியம்மையார் விக்கிரகமும் அராலி மேற்கினைச்சார்ந்த அ. சுவாமிநாத ஆசாரியரால் ‹50 உருபாய் கூலிக்குச் செய்யப்பட்டவை. விநாயகர் கோயிற் பூசகர் காலப்போக்கில் அவ்விக்கிரகங்கள் பின்னமுள்ளனவென்றும் அவை வார்க்கப்படும்பொழுது கருவில முழுதும் சரியாகப் பாயாததினல் அவற்றின் அஙகப் பிரத்தியங்கசாங்க உபாயங்களில சில அவ்வாறு பின்னமுற்றனவென்றுங் கண்டனர். ஆசாரியார் விக்கிரகங்களின பின்னப்பட்ட அங்கங்களை வெவ்வேறாகச் செய்து அவற்றினை ஆணிவைத்து அறைந்து பொருததி நன்றாக அராவிப் பிறர் எளிதில் அறியாவண்ணஞ் செய்திருந்தார். விசுவநாதர் சின்னத்தம்பி இப்பின்னமடைந்த விக்கிரகங்கள் சைவாகமங்களும் சிறப சாஸ்திரங்களும கூறும் விதிகளுக்கு விரோதமானவையோ அல்லது இவை கோயிலில் வைத்து வழிபடத் தக்கவையோ என்று இவற்றினைப்பார்வையிட்டுத தீர்ப்பளிப்பதற்குச் சைவக்குருமார், சைவப்பிரசாகர், வித்துவான் முதலியோர் கொண்டகூட்டமொன்றனை விநாயகர் கோவிலிற்கூட்டுதற்கு எண்ணினர். இவர் நாவலர் அவர்களைக் கண்டு தாங் கூட்டுங் கூட்டத்திற்கு அவர்கள் சமுகமளித்து அவ்விக்கிரகங்களைப் பார்வையிட்டுத் தீர்ப்பினை வழங்க வேண்டுமென வேண்டினர்.

நாவலர் அவர்கள் இவ்வாண்டில் ஆடித்திங்களில் மூன்றாந் தேதியன்று இலங்கை நேசன் என்னுஞ்செய்தித்தாளில் யாழ்ப்பாணத்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலுக்குத் தெற்கு முகமாகக் கதிரேசன் கோயிலொன்றைச சைவாகம சாத்திர விதிகளுக்கு விரோதமாகக் கட்டியதைக் கண்டித்திருந்தார். இருபது நாட்கள் கழித்து வெளிவந்த இலங்கைநேசனில நாவலர்சுட்டிக்காட்டி வினவிய இரத்தினமணிபதினெட்டுககிடையிற்சேர்ப்பதற்கென "அறறது சொல்லுவோன்' என்னும் புனைபெயரில் ஒருவர் ஆறு வினப் பவளங்களை நாவலர் அவர்களை ஆதரித்து எழுதியிருந்தார். தம்மை இதுகாறும் ஆதரித்துப் போற்றிய நாட்டுக்கோட்டைச் செட்டிமாரே நாவலர் அவர்களின் இறுதிச்சீற்றத்திற்குச் செய்தித் தாள் வாயிலாக இலககாகினர். ஆனல் அவர்களுக்கு நாவலர் அவர்கள் கூறியவற்றின் மெய்ப்பொருளை உணரும் ஆற்றலோ அல்லது அவற்றினை எதிர்க்கும் ஆற்றலோ இல்லை என்பதை அவர்கள் எவ்வகையான மறுப்புரையும எழுதாமை எடுத்துக்காட்டுகிறது. நாவலர் அவர்கள் "உற்றதுகூறுவோன்" எனனும் புனைபெயரில் எழுதிய வண்ணார்பண்ணைக் கதிரேசன கோயிலபற்றிய கண்டனத்திறகுக் கீழ இலங்கைநேசன் பத்திராதிபர் தமகருத்தினை வருமாறு தெரிவித்துளளார். "கடிதரே' இவர்களிதற்கென் செய்வார்கள இவர்களது பிரதிட்டாசாரியரென் சொல்லுவார். ஐயோ! குருடனைப்பிடித்து ராசமுளி முளி யெனறாற் போலிருக்கே கும்பாபிஷேகத்தன்று எனவகாணும குருக்களையா முகுர்த்தமாச்சே, இளவு சுறுக்கு வேலையைபாருங்காணும் இளவு என்றவர் நகரஙகூடி இளவிளவென்று பேசுவார்கள் போலும்".

இ. நே. பத்.

இவ்வாசிரியர்கூற்றே அவர்களின் இயலாமையை எடுத்தியம்புகின்றது. இச்சூழலிலே கோயில் கட்டுவித்த ஒருவர் தம்மிடம் வந்து சிற்பாசாரியார் செய்த வேலையை மதிப்பிட்டுக் கோயிலுக்கும அதனைச் சார்ந்தோருக்கும் ஏற்படவிருககும் மாசினை நீககுமாறுகேட்டது நாவலர் அவர்களை அவர்பால் எல்லையில்லா மதிப்பையும் அன்பையுங் காட்டுமாறுசெய்தது. தாங்காட்டும் ஆகமநெறியில்ஒழுகும விசுவநாதர் சின்னத்தம்பியின் வேண்டுகோளுககு இணங்கி அககூட்டத்தினைக கூட்டுவிக்குமாறு பணிததார். அக்கூட்டம் கார்த்திகைத் திங்கள் முதலாந் தேதி நடைபெறவிருந்தது.

(வளரும்)

## சாகித்திய மண்டலத்தின் தமிழ் உறுப்பினர்

"சைவத்தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கந்தபுராணம் தக்ஷ காண்டம் உரை நூலைத் தாமாகவே தேடியெடுத்து ஆயிரம் ரூபா பரிசிலையும சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதையும் வழங்க முன்வந்த ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தின் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக் குரியன".

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நூல் வெளியீட்டுச்சபையின் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் பண்டிதமணி அவர்களுக்கு சாகித்திய மண்டலம் அளிக்க இருக்கும் பரிசும் விருதும் பற்றி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். பண்டிதமணி அவர்களைக் கௌரவித்து குறித்த விருதை வழங்குமமுகமாக .-1.-68 திங்கட்கிழமை வெள்வதத்தை சைவ மஙகையர் சுழக மண்டபத்தில் ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம ஒரு தமிழ் இலக்கிய விழா எடுப்பது குறித்தும் தமது நன்றியை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்கள் அபிமானிகள், அன்பர்கள் சார்பில் தெரிவிப்பதாகக் குறிடுபிட்டுள்ளார்,

ஸ்ரீ சாகித்திய மண்டலத்தின் உயர்உறுப்பினர் என்ற விருதைப்பெறும் முதலாவது தமிழர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நினைவுத் திரையில்:

### மதுபானத்தை நீக்குங்கள்

" இந்த இலங்கையின் அரசிறை வருவாய்க் கணககுகளைப் பற்றிச் சிறிது ஆராய்ந்தவிடத்து, பெருந் தொகைப் பணம் மதுபானத்தினல் அரசினருக்கு வருவாயாகக கிடைககின்றதென அறியலானேன். இந்தியாவிலே மது பானம் ஒரு வெறுககத் தக்க செயலாக அவமதிககப்படுகின்றது இலங்கையில் அப்படி மதிககப் படவில்லை யென்பது எனக்கு மெகத மனவருததம் இந்த நாட்டிலேபௌத்தர்சைவர் கிறிஸ்தவர் இஸ்லாமானவர்எனப் படுஞ் சமய வாதிகள் இருககின்றார்கள் சைவர்களுக்கு மது பானம பாவமென விலககப்பட்டதாகும இஸ்லாமானவரும் அப்படியே மதுபானததை ஒதுககிவிட்டிருககின்றனர் ஆனல இங்குள்ள கிறிஸ்தவர்கள மதுபானத்தைப் பாவமாக மதிப்பதில்லையெனத் தெரியவருகிறது அதன் பொருட்டு நான் துயரப்படுகின்றேன் நான் ஆயிரக்கணககான கிறிஸ்தவர்களுடன் சிநேகமாயிருககிறேன் அவர்களெல்லாரும் மதுபானம் கிறிஸ்துவின் போதனைககு விரோதமானதென்றே சொல்லியிருக்கின்றனர் அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவருடன்நான் பழகியிருக்கிறேன். அங்கே அவர்கள் மதுபானததை யொழித்துவிடப் படும் பிரயாசம் கொஞ்சமல்ல நீங்கள் பௌத்தர் சைவர் கிறிஸ்தவர் இஸ்லாமானவர் என்ற பேதம் பாராட்டாமல் எல்லோரும் ஐக்கியப்பட்டு இந்த மதுபானமெனப்படும் பெருங்கேட்டை நாட்டிலிருந்து துரத்திவிடுதல் வேண்டுமென காண்மிகக ஆவலுடன் கேட்கின்றேன்"

"மகாத்மா காந்தி அவர்கள்"

இந்துசாதனம்

1927 ம் ஆ நவம்பர் மீ 28௳

# சித்தாந்த சைவமகா நாடு

["இந்துசாதனம்" அபிமான கிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

முற்றுடர் — 2.

மகாநாட்டின் தலைவரான ஸ்ரீ. எஸ் சென்னியப்பமுதலியார் தலைமையுரை நிகழ்த்துகையில்'திருஞானசம்பந்தரும் மெய்கண்டதேவரும் சைவசமயத்திற்கு முதற்குரவர்களாவார்கள். உலகம் அறிவுப்பாதையிற் செல்லுகின்றது அன்பு நிலையும் பல கோணங்களில் உள்ளன. ஆகவே நாம் திருமுறைகளின் வழியில் அன்பு நிலையைப்பெருக்கிக் கொள்ளல் வேண்டும். சைவ சித்தாந்தநூல்கள் நமக்குவழிகாட்டக்கூடியநூல்களாகவும் குரு உபதேசமாகவும் அமைந்துள்ளது. ஆகவே சித்தாந்த சைவர்களாக நாம் விளங்கி வரல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ சென்னியப்பமுதலியார் மேலும் பேசுகையில் திருவாவடுதுறை ஆதீன ஞானபீடப், தன்னிகரில்லாப் பணிகள் செய்துகொண்டு வருகின்றதை உலகம் நன்கு அறியும் என்று கூறித் தன்னுடையபாராட்டுதலைத் தெரிவித்துக்கோண்டார்.

ஆதீன வித்துவான் குடந்தை ஸ்ரீ.த.ச. மீனுட்சி சுந்தரம்பிள்ளை "மெய்கண்டார் மான்மியம்' என்ற தலைப்பில் பேசுகையில் சித்தாந்தசைவத்திற்கு தீட்சையேஇன்றியமையாததாகும்; அதனையே நமது சாஸ்திரங்கள் நன்கு கூறியுள்ளது. எல்லா சமயங்களும் அதன் வளர்ச்சி குன்றும்போது ஆண்டவனை 100—200 ஆண்டுக்கு ஒரு முறை பெரியோர்களைத் தோற்றுவித்து சமயவளர்ச்சியை செய்து வருகின்றன. அம் முறையில் நமது சைவசமய வளர்ச்சி குன்றிய போது தான் ஆண்டவன் நமது மெய்கண்டதேவரைத் தோற்றுவித்துச் சமய வளர்ச்சியின் வரையறுப்பிற்த' சிவஞாபோதத்தையும் உபதேசம் செய்துளளார். ஆகவே "சிவஞானபோதம" சித்தாந்தாசைவத்திற்கு தலையாகவுள்ள நூலாகும். சைவ மக்கள் சிவஞான போத நூலைப்படித்துப் பயன் பெறல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தொடர்ந்து பேசுகையில் மெய்கண்டதேவர் தோன்றியிராவிட்டால் நமது சைவமேமறைந்து போயிருக்கும் சைவசமயமும் வரையறுத்தல் செய்திருக்கவும் முடியாது என்றும் கூறினர்தொடர்ந்துபேசுகையில் வடமொழியிலிருந்துவந்த சிவஞானபோதம் இல்லையென்றுயாரும சொல்லக்கூடாது என்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன், திருவாவடுதுறை ஆதீனத்தில் குல தெய்வமாக விளங்கியுள்ள ஸ்ரீ மாதவசிவஞான சுவாமிகள் சிவஞான போத மாபாடியம் என்ற நூலை தமிழ் மொழியில் அருளிச் செய்துள்ளார்கள் என்றும் கூறினுர்.

திருவிடைமருதூர் வித்துவான் ஸ்ரீ.பொன் சுப்பிரமணியபிள்ளை "சிவபோகம்"என்ற தலைப்பில்பேசுகையில் தேவாரத்திருமுறைகளை ஓதிக்கொண்டு வந்தால் தான் சிவபோகத்தை அடை..... என்றும்,ஆகவே சைவமக்கள் சிவபோகத்தையே அடைக்கவேமாக்கொள்ளுவதற்குமுற்படல் வேண்டும் என்றும் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ. மாதவ சிவஞானசுவாமிகள் அருளிய சிவஞானபோத மாபாடிய தமிழ் நூல் ஒன்று மட்டுமே இன்னும வெளியிடாமலுள்ளது. மற்றையசித்தாந்தசாஸ்திர -தோத்திர நூல்கள் அனைத்தையும் வெளியிட்டுவிட்டது என்றும் கூறினுர்.

தேவகோட்டை ஸ்ரீதத்புருஷதேசிகர் சித்தாந்தசைவம் என்ற தலைப்பில்பேசுகையில் சித்தாந்த சைவர்கள் யார் என்ருல் சிவபெருமான் ஒருவரையே வழிபாடு செய்பவர்கள் தான் சித்தாந்தசைவர்களாவார்கள் என்று வலியுறுத்தலுடன் கூறினுர் சமயாசாரியர்கள் அத்தனை பேர்களும் சிவபெருமானையே வழிபட்டு வந்தனர் என்பதனை சைவ உலகம் நன்கு அறியும் ஞான சம்பந்தர் தோன்றவில்லையானுல் சைவமில்லை,சுந்தரர் தோன்றவில்லை யென்ருல் ஞாசம்பந்தர் ஏது, சுந்தரர் அருளிய தொண்டத்தொகை நூல் மூலமே தான் நமது,பெரியோர்களை அறிந்துகொள்ளமுடிந்தது ஆகவே திருத்தொண்டத்தொகையைப் படித்தவர்கள். எத்தனை பேர்கள் உள்ளனர்? தேவாரப்பதிகம் முழுவதையும் ஓதக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் உள்ளனர்? என்பதனை சைவமக்கள் சிந்தனை செய்து பார்க்க வேண்டும் மற்ற சமயங்களிடத்தில் நமக்க்கு காழ்ப்பு என்பது கிடையாது. மற்றச் சமயங்கள் வளர்ச்சி அடைந்தாற்ருன் நமது சைவசமயம் வளர்ச்சி அடையமுடியும், நமது சைவ சமயம தத்துவ அடிப்படையில் மேலோங்கியசமயமாகும் ஆகவே நமது சித்தாந்தநூல்களைபடித்து சித்தாந்தசைவர்களாக விளங்கிவரல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

ஸ்ரீல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உற்சவவிளக்கம்"என்ற நூலுக்கு உரை தொகுத்து அச்சிட்டு மாநாட்டில் 236ஆவது மலராக வெளியீடு செய்துஎல்லோருக்கும் அன்பளிப்பு செய்தார்கள.

## திருப்பணி நிதிக்குப் பசளை

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராசேசுவரியம்பாள் ஆலய கட்டட வேலைகளுக்கு நிதி திரட்டும் நோக்கமாக நாயன்மார்கட்டு சைவசமயஅபிவிருத்திக் கழகத்தினரது திருமுறை பஜனை நாளை மாலை 6½மணிதொடக்கம் நல்வியங்காட்டு இல்லங்கள் தோறும் சிறப்பாகநிகழவிருக்கிறது. ந.வி.

## வருகைதருவார்கள்

நவம்பர் மீ 5 முதல் 28 உ வரை இலங்கையில் நடைபெறவிருக்கும் தார்மீகப் புனருத்தாரண இயக்கமகாநாட்டில கலந்துகொள்ளும்முகமாக மகாத்மா காந்தியின் பேரன் திரு ராஸ்மோகன் காந்தி அவர்கள் நவம்பர் மீ 4உ ஈழத்துக்குவருகின்றுர்.

X X X

தாய்நாட்டைச் சார்ந்த பூதான சபைத் தலைவா திரு. எல். ஆர். சுப்பிரமணியம் நவம்பர் மீ முற்பகுதயில் ஈழத்திற்கு விஷபம் செய்வார் என எதிர்பார்க்கப் படுகின்றது. ——


## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுன்னுகம் மேற்கு
1 பொன்னையா வல்லிபுரம்
2 பெண் அன்னப்பிள்ளை —வழக்காளிகள்
இல M B 8806 எதிராக
சுன்னுகம் மேற்கு
1 நாகமணி கதிரிப்பிள்ளை
2. பெண் இளையபிள்ளை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8806 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 ம் ஞூ கார்த்திகை மீ 24 ம் திகதி (24-11-68) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: ரூபா. 2050/- இதில் ரூபா 1150/- க்கு 3-7-67 திகதி தொடக்கம் 16-1-68 திகதி வரைக்கும் 10 வித வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வித வட்டியும் கோட்டுச் செலவு விடப்பட்டது.

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை அலுக்கையும் அதக்கைவயலும் தெற்பரப்பு 4½ வட கிழக்குப் பக்கமாய் இருக்கும் கிணற்றில் பங்கும் தார்வை வழி வாய்க்காலும் எல்லை கிழக்கு எதிராளிகளுக்குரிய ஆதனங்கள், வடக்கு ஆறுமுகம் தம்பிப்பிள்ளைக்கும் நாராயணபிள்ளை பெண் சரஸ்வதிப் பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், மேற்கு நாகமணி வேலுப்பிள்ளைக்குரிய ஆதனங்கள், தெற்கு தம்பு கை பெண் வியாளருக்கும் சின்னப்பு செல்லையாவுக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
சித்தங்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
20-10-1968 எம், 250 25-10-68

## அடைவு நகை ஏலற்விபனவு

யாழ்ப்பாணம் 616, காங்கேசன் துறைவீதி கே. எஸ் சுப்பிரமணியம் அவர்களிடம் 1967-ம்ஞூ ஒகரோபர்மீ 1-ஆந் திகதிக்கு (1-10-67) முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவுகள் 1968 ம் ஞூ நவம்பர் மீ 14 உ (14-11-68) வியாழக் கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் ஷ அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும

"இராசகிரி" வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
643 காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம். M. 240, 18, 23-10-68.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகளை ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலயமூலம் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.


## திருவாதவூரடிகள் வரலாறு

### ஹாலாஸ்ய மான்மியத்தின் வண்ணம்

— பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயர் —

அத்தியாயம் - 65.
(முனவளர்ச்சி 22)

25. "அப்பொழுது வானத்தில் மிக அதிகமாகப் புழுதி கிளம்பியது." சிறந்தசாரதிகளுடன், கூடிய குதிரைகள் இங்கு வருகின்றன வானத்தில், குளம்பிலிருந்துகிளம்பிய புழுதி தென்படுகின்றது' என்று ஜனங்கள் அந்த மந்திரியுடன், கருணையோடு கூட இந்த விருந்தாந்தத்தைக்கூறினர்.

இவ்விதம் விருத்தாந்தத்தை யுணர்ந்த மந்திரி, வாதபுரேசன் மனதினுள் வருத்தமென்ருலும், 'ஆர்யர்' என்னும் பண்ணிலமைந்த இந்தப்பாட்டை சிவனை நோக்கிக் கூறுகின்றர்.

ஜனவன்ஞதனே! உமது வார்த்தையை நம்பி, நிச்சயமுள்ளவனுயிருக்கிறேன். என்னை,உண்மைபேசுகின்றவனுக, ஆக்கிக்கொண்டு விரைவில், குதிரைகளோடு,தோன்றுவீராக!

அந்தச்சந்தர்ப்பத்தில், சில ஜனங்கள் திரும்பவும் அங்கு வந்து கூறினர் "பாக்யசாலியான மந்திரிகளுட் சிறந்தவரே! குதிரைகள் வந்து கொண்டிருக்கின்றன. பேரறிவாளரே! மன்னனுக்கு விரைவில், தெரிவிப்பீராக! துன்பத்தை விட்டு விடும்"

30. அவர்களின் அவ்வார்த்தையைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சியுற்ற அவர், துன்புறுத்தும் சேவகர்களால், அவிழ்த்து விடப்பட்டு,அங்ஙனமே செய்தார்.

மந்திரியாரின் வார்த்தையைக் கேட்டுப், பாண்டியமன்னன் மிகமகிழ்ச்சியுற்று, வெளி மண்டபத்தையடைந்து, எல்லா மந்திரிகளுடனும் கூடிக்கொண்டு, தாசிப்பெண்களால் அழகாகச் சாமரம் வீசப்படுகின்றவனுய், சிறந்த ஆபரனங்களை அணிந்தவனுய் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு காலத்தைப் போக்கிக் கொண்டு அவ்விடத்திலேயே நெடுநேரம நின்று கொண்டிருந்தான்.

சுந்தரேசனுடைய மாயையினுல், விரைவில்குதிரைகள் வரவில்லை, அப்பொழுது பாண்டியமன்னன் கோபமுற்று, சேவகர்களை நோக்கி, இங்ஙனம் கூறினுன்.

"இந்தமந்திரி உளறுகிருன், ஆகையினுல், இவனை நன்கு அடியுங்கள்", என்றமன்னனுடைய வார்த்தையைக்கேட்டு, புளியம்தடிகளை எடுத்துக் கொணடு, கருணையற்ற அவனது சேவகர்கள் அவனை (வாதபுரேசரை) அடிப்பதற்குவந்தனர்.

வருகின்ற அவர்களை நோக்கி, மந்திரி, சிவபக்தியினுல், மங்களகரமான சூக்தங்களால், தமிழ்ப் புலவர்களை ஓடச்செய்து கொண்டு, அப்பொழுது (சிவனை) துதித்தான்.

அறிவாளிகளின் மனதை மகிழ்வூட்டிக் கொண்டு, 'ஆர்யா' என்னும் பண்ணிலுள்ள இப்பாட்டைப் பாடுகிருன்

பக்தர்களின் ஆபத்தைப் போக்கடிக்கும் சிவபெருமானே! நொடிப்பொழுதில் தோன்றுவாயாக! மன்னனுடைய சேவகர்கள் எங்கே குதிரைகள்? விரைவில் சொல்லு என்று என்னை அடிக்கின்றனர்.

(வளரும்)

## திருப்பதியில் நாகம்?



பத்தர்: 'கெட்டிக்காரன் புழுகு எட்டுநாள்' மேத்த என்பார்கள்; கடந்த சில நாட்களாக ஊரெல்லாம் பெரும் பரபரப்பையூட்டி வந்த திருப்பதி ஸ்ரீ வேங்கடாஜலபதி சுவாமி கோவில் நாக பாம்புக் கதையும் இம் முதுமொழியை மெய்ப்பிக்கத் தவறவில்லை! '....பாம்பு வந்ததாம்' என்ற (நம்) மக்கள் பட்டபாடு! அப்பப்பா!! நம்பவேண்டியதை நம்பாயினம்! எவரை நோவது!

சித்தர்: 'பாம்பு வெளி வந்த செய்திப்பத்திரத்தைக் கண் துஞ்சாமற் பாராயணம் பண்ணிஞர்கள்; ஆன்ம லாபமளிக்கும் அரிய திருமுறைகளை இப்படிப் படிப்பார்களா?பரப்புவார்களா? தேவஸ்தானம் தகிலைப் போக்கி உண்மையை விளக்கியிருக்கு. 'திருவேங்கட முடையான் திருவருள் யாவரையும் நன்னெறிப் படுத்துவதாக! திருவடிசரணம்!

"நாயன்மார்-தாதன்"

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. த. செ. செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-66 முதல் 31-3-67 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 25-11-68 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிற நீக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. Ragunathan
Auctioneer

23—10—68 எம் 247. 25, 2-11-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. N.T. சிவஞானம் 2. Mrs. புவனேஸ்வரி சிவஞானம் இருவரும் 48 முதலாம் குறுக்கு தெரு யாழ்ப்பாணம் —வழக்காளிகள்

இல.M. B 7843. எதிராக

M. குழந்தைவேலு கதிரவேலு புங்குடுதீவு மேற்கு தற்சமயம். பெரியகடை யாழ்ப்பாணம். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் M. B. 7843-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 5985/00ம் 30-11-1965 தொடக்கம் 13-6-1967 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின்முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவுரூபா 413/30. 1-6-1968 ல் கொடுக்கப்பட்ட ரூபா 500 கழித்து அறவிடப்படும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம்: யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயிற்பற்று புங்குடுதீவு கிழக்கு இறை "தனக்கப்பவிலா திகம் தனக்கப்பன்" நெற்பரப்பு 18. இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு முத்துவேலு கைம்பெண் சற்குணத்தின் ஆதனம். மேற்கு சொக்கலிங்கம் பெண் நாகம்மாவின் ஆதனம் தெற்கு ஐயம்பிள்ளை பெண் மனோன்மணியின் ஆதனம். யாழ்ப்பாணத்தில் பதிவுபட்டது இலக்கம். C 257/30

2. ஷை. இறை "இறிபகொண்டல்" நெற் பரப்பு 40, குழி 10. உறுதிப்படி எல்லை கிழக்கு. கனகசபை பெண் அன்னம்மாவிற்கும் பிள்ளையார்கோவிலுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் வடக்கு காசிப்பிள்ளை பெண் அன்னலட்சுமிக்கும். பங்காளருக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு, மூத்ததம்பி பசுபதிப்பிள்ளைக்கும் சங்கரப்பிள்ளை மகள் அபிராமிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு ரோட்டு யாழ்ப்பாணத்திலிதியப்பட்டது இலக்கம் C/513/130, இதில் செரியலாய் ½ பங்கு.

கா. தர்மலிங்கம்

உரும்பராய், 15-9-68, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம் 241, 25-10-68.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு 1. ஆறுமுகம் அருணாசலம்
2. பெண் செல்லநாயகி

இல. 3247. எதிராக -வழக்காளிகள்

சாவகச்சேரி வடக்கு தற்போது மிருசுவில் கெற்பேலி
1. நாகமுத்து கந்தராசா 2. பெண் தங்கம்மா —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 3247-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1968 ஆம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 21-ந் திகதி (21-11-68) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2565-ம் இதில் ரூபா 2000 -க்கு 22-7-66 திகதி தொடக்கம் 13-11-66 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 312-75 சதம். இதில் கோட்டுச் செலவில் ரூபா 100 -ம் 2-12-67 ல் ரூபா 1000 -ம் மேலும் 24-4-68 ல் ரூபா 1000 -ம் இறுபட்டது.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை "சேனாதிராசன் வளவும் மறு பிரிவுகளும் 'நிலைப்பரப்பு 25¼. இதில் நிலைப்பரப்பு 8 ம் குழி 6 ம் நீக்கி தெற்குப் பக்கமாக மிகுதி நிலைப்பரப்பு 16-ம் குழி 12¼ ம் இதில் கிழக்குப்பக்கமாக நிலைப்பரப்பு 8 ம் குழி 6 ம் இதற்கு எல்லை கிழக்கு கந்தர் பொன்னையாவின் ஆதனம். வடக்கு சிவசம்பு பெண் பகவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு இதன் மிகுதி ஆதனம், தெற்கு சின்னையா பெண் இராசம்மாவின் ஆதனம், இக் காணியில் இருக்கும் கிணற்றில் தெற்கு மேற்கு எல்லைக் காணிகளுக்குரிய 2/3 பங்கும் புற நீங்கலாக மிகுதி யடங்கலும்.

2. மேற்படி சாவகச்சேரியிறை 'மண்டுவில் சேனாதிராயன் வளவு'' நிலைப்பரப்பு 12. இதில் வடக்குப் பக்கமாக முதலாம் காணியிலிருந்து ரோட்டுக்குப் போகும் 8 முழ அகல முன்னாலாதை குழி (3-ம்) எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு சிவசம்பு பெண் பகவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு 1 ம் காணி. தெற்கு இதன் மிகுதி ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

தெல்லிப்பழை. 10-10-1968 Commissioner & Valuer.
(எம், 248 25-10-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 6209

ஞானசுந்தரமும் பெண் கனகசுந்தரியும் கொககுவில் —வழக்காளி

கந்தையா கைம்பெண் பூரணம் திருநெல்வேலி யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6209 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1968-ஆம் வருடம் கார்த்திகை மாதம் 13-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 6050/-ம 22-11-63 தொடக்கம் 4-8-64 வரைக்கும் ரூபாய் 4000க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 125/-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திக், கரச்சி கோவில் பற்று கரச்சிப்பகுதி முரசுமோட்டையில் உள்ள 27ஏக் 2றூட் 32பேர்ச்சஸ் கொண்ட முரசுமோட்டைக் கமம் என்னும் காணியில் சொரியலாக 4/10 பங்கு, இதற்கு எல்லைகள் -கிழக்கு-பணக்கண்டியாறு வடக்கு-ரோட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் மேற்கு-79-ம் இலக்கக் காணி தெற்கு-ரோட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணி.

பதிவு இல. B. 38/18

சோ. நரசிங்கம்
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்
தொல்புரம்.
13-10-68

(எம். 249 25—10—68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 4669/A.

உரும்பராய்
1. மயில்வாகனம், நடேசு
2. பெண் பத்மராணி —வழக்காளிகள்

எதிராக

மீசாலை, மீசாலைதெற்கு
வயிரமுத்து குமாரவேலு —எதிராளி

யாழ்பாணம் றிக்வெஸ் கோட்டில் 4669/A -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1968-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 18-ம் திகதி (18-11-68) திங்கட்கிழமை முற் பகல் 10மணிதொடக்கம்அந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டிரூபாய் 725/ -ம் இதில் ரூபாய் 500/ -க்கு 17-3-65 திகதி தொடக்கம் 27-7-65 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீதவட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 48-25 சதம்

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கராச்சிப்பகுதிகராச்சிக் கோவிற்பற்று குஞ்சுப்பரந்தனிறை "கயிலன் வயல்" நெற்பரப்பு 55, இதில் மேற்குப் பாகமாக நெற்பரப்பு (25-ம்) எல்லை கிழக்கு மாணிக்கம் பெண் காசிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு கதிர்த்தம்பி கைம் பெண் நாச்சிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு கெருடாவில் கந்தசுவாமி கோவில் ஆதனம். தெற்கு முருகேசு தம்பிஐயாவின் ஆதனம் இதில் சொரியலாய் மூன்றில் ஒரு பங்கு (1/3)

முற் பதிவு L 6/337

2. மேற்படி குஞ்சுப்பரந்தனிறை "வன்னியன் தறைவயலும் மறுபிரிவுகளும் அல்லது கொல்லன்தறை இராய்வெளி" நெற்பரப்பு (400-ம்) எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்குழுளமும் வண்ணார்பண்ணை சிவன்கோவில் ஆதனமும் மேற்கு இராமநாதர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சால்ஸ் தாமோதரம்பிள்ளை கைம் பெண் தங்கமுத்துவின் ஆதனம் இதில் சொரியலாய் முப்பத்திரண்டில் ஒருபங்கு. (1/32)

முற பதிவு L. 6/238.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 6-9-1968
எம 245 25-10

## பிரிவிடுதல் நொத்திஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

1 துன்னாலை வடக்கு வல்லி வேலுப்பிள்ளையும்
2. பெண் சின்னி அல்லது சின்னம்மாவும் —வழக்காளிகள்

இல: 9962 எதிராக

1. துன்னாலை வடக்கு K ஆறுமுகம் அல்லது வடிவேலு விசையசுந்தரம், 2. ஷை யூர் K ஆறுமுகம் அல்லது வடிவேலு அமிர்தலிங்கம், 3. ஷை யூர் தமையா தாமோதரம் பிள்ளையும், 4 ஷை யூர் பெண் மங்கையற்கரசியும், 5. ஷை யூர் தம்பையா செல்வராசா, 6. ஷை யூர் நாகப்பர் செல்லையாவும் பெண், 7, சிவக்கொழுந்துவும், 8. ஷை யூர் வல்லி சின்னத்தம்பி, 9. துன்னாலை தெற்கு அருமைத்துரை அருளானந்தம், 10. ஷை யூர் அருமைத்துரை சிவானந்தம், 11. துன்னாலை வடக்கு செல்லப்பா இராசசிங்கமும், 12, பெண் தங்கம்மாவும், 13, ஷை யூர் செ. நாதர் கனகசபையும், 14. பெண் சிவக்கொழுந்துவும், 15 ஷை யூர் கதிரவேலர் அல்லது கதிர்ப்பிள்ளை வல்லிபுரம். 16. ஷை யூர் தங்கராசா சிவனடியான். 17. ஷை யூர் சின்னையா இராசதுரை. 18. ஷை யூர் கதிரவேற்பிள்ளை நாராணபிள்ளை —எதிரிகள்

துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சி இறை மாப்பாணர் பெண் மருதாத்தையும் மறுபேரும் தோம்பு அததாய கில பர 13 1/2, ஷை அததாய வல் நெ பர 5. ஷை கதிர்காமர் கனகரும் மறுபேரும் தோம்பு அததாய கில பர 13½, ஷை அத்தாய வயல் நெ பர 5 என்னும் ஆதனங்களை 1951 ம ஆண்டின் 16 ம இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற் கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந் திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1968 ஆம் கார்த்திகை மீ 13 ம உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
செ. யோ. நவரட்டினம்
சக்கிடுத்தார்

1968-ம் ஆம் ஐப்பசி மீ 16 உ
எம் 224 (25-10-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 7265. D. C. J.

1 மார்க்கண்டு இராசதுரை வட்டுக்கோட்டை கிழக்கு
2 ஆறுமுகம் சங்கரப்பிள்ளை பெண் செல்லம்மா வட்டுக்கோட்டை —வழக்காளிகள்

எதிராக

1. கந்தையா சபாரத்தினம் 2. பெண் பரமேஸ்வரி வட்டுக்கோட்டை கிழக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 7265-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1968-ம் ஆம் கார்த்திகை மீ 9உ சனிக்கிழமை பகல் 10-11-12 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை; —முதல்வட்டி ரூபாய் 5688-88 ம 22-2-65 தொடக்கம் 31-5-66 வரைக்கும் ரூபாய் 4000/—க்கு 8% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 502-80 சதம் எழுபட்ட செலவு ரூபாய் 344-70 சதம் முடிவான செலவு ரூபாய் 97-25 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபாய் 60-85 சதம்

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை இறை மீசைப்புலம் நிலப்பரப்பு 2 குழி 15½ கிணறும் எல்லை கிழக்கு விசுவநாதர் செல்லத்துரை பெண் நாகம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை முகப்புடன் சுப்பிரமணியம் கைம் பெண் வள்ளியம்மையினுதனம் மேற்கு இராசரத்தினம் பெண் கனகமுத்துவினுதனம் தெற்கு ஆறுமுகம் பெண் அன்னக்குட்டியினுதனமும் மேற்கு எல்லையிலிருக்கும் கிணறும் தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் புறநீங்கலாக இதடங்கலும்.

2. மேற்படி இறை நிந்தைபிட்டி நெற்பரப்பு 10 பொன்னம்பலம் பெண் தைலமுத்துவின் ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு ரோட்டு தெற்கு சங்கரப்பிள்ளை குமாரசுவின் உரிமைக்காரின் ஆதனம் இதற் சொரியலாய் அரைவாசி அதைச் சேர்ந்தவைகளும்

3. மேற்படி இறை. திருவிளக்கை நிலப்பரப்பு 21 எல்லை கிழக்கு பிள்ளையார் கோவில் ஆதனமும் சபாபதி அரியகுட்டியினுதனமும் வடக்கு தண்ணீர் வாய்க்கால் மேற்கு இராமநாதர் வேலுப்பிள்ளையினுதனமும் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை கைம் பெண் வள்ளியம்மையினுதனமும் தெற்கு வயிரமுத்து வேலுப்பிள்ளை மகன் ஞானரத்தினத்தினுதனம் இதில் சொரியலாய் அரைவாசி

இகதிரபவனம் மா. முருகேசு, J. P.
புங்குடுதீவு, 31-8-68. கொமிஷனர், விலைமதிப்பாளர்.
எம. 251. 25-10-68)

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 25—10—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,